செய்தி வெளியீடு எண்.201 நாள்.14.04.2017

**திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் உள்ள ஒருங்கிணைந்த விளையாட்டரங்கத்தில் கோடைக்கால பயிற்சி முகாம் காலை மற்றும் மாலை வேளைகளில் நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

~~~~~

2017-ம் ஆண்டிற்கான கோடைக்கால விடுமுறை நாட்களில் 21 நாட்களுக்கு காலை, மாலை இரு வேளைகளில் பயிற்சி முகாமினை நடத்தப்படவுள்ளது. மாவட்ட நிர்வாகம், மாவட்ட உடற்கல்வி ஆய்வர் ஆகியோரின் உதவியுடன் இப்பயிற்சி முகாமினை நடத்தப்படவுள்ளது. அதிக அளவில் மாணவ, மாணவியர்கள், மாணவர்கள் அல்லாதோர் இப்பயிற்சி முகாமில் கலந்து கொண்டு இப்பயிற்சி முகாமில் பயனடைய இது ஒரு அறிய வாய்ப்பாக உள்ளது. திறமையுள்ள உடற்கல்வி இயக்குநர், உடற்கல்வி ஆசிரியர், விளையாட்டு வீரர்கள், கொண்டு பயிற்சி முகாம் நடத்தப்படவுள்ளது. பாரதியார் தின போட்டிகள், குடியரசு தின போட்டிகள், மாவட்ட அளவில், மாநில அளவில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் இப்பயிற்சி முகாமில் கலந்து கொண்டு பயன்பெறலாம்.

2017-ம் ஆண்டிற்கான கோடைக்கால பயிற்சி முகாம் 27.04.2017 முதல் 17.05.2017 வரையிலான 21 நாட்களுக்கு, காலை, மாலை இரு வேளைகளில் ஒருங்கிணைந்த மாவட்ட விளையாட்டரங்கத்தில் நடத்தப்படும். மேலும் விவரங்களுக்கு மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அவர்களின் கைபேசி எண். 7401703482 –ல் தொடர்பு கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி,எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~